யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
Field Work Centre
FWC

# தவணைப் பரீட்சை, மார்ச் - 2016
# Term Examination, March - 2016

| நாடகமும் அரங்கியலும் – II | புள்ளித்திட்டம் | தரம் :- 13 (2016) |
|---|---|---|

## பகுதி - I

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01) | **3** | 11) | **2** | 21) | **3** | 31) | **5** |
| 02) | **5** | 12) | **3** | 22) | **3** | 32) | **3** |
| 03) | **4** | 13) | **5** | 23) | **5** | 33) | **2** |
| 04) | **1** | 14) | **2** | 24) | **3** | 34) | **2** |
| 05) | **2** | 15) | **1** | 25) | **4** | 35) | **4** |
| 06) | **2** | 16) | **4** | 26) | **5** | 36) | **3** |
| 07) | **3** | 17) | **5** | 27) | **4** | 37) | **2** |
| 08) | **5** | 18) | **1** | 28) | **2** | 38) | **3** |
| 09) | **3** | 19) | **2** | 29) | **5** | 39) | **1** |
| 10) | **1** | 20) | **3** | 30) | **1** | 40) | **2** |

($40 \times 1 = 40$ புள்ளிகள்)

## பகுதி - II

### பிரிவு - A

01) (i) வில்லியம் ஷேக்ஸ்பியர் (1 புள்ளி)

(ii) தீராத அன்பு, சந்தேகபுத்தி காரணமாக காதல் குரோதமாக மாறும் நிலை (2 புள்ளி)

(iii)
- ✶ ஒதெல்லோ
- ✶ டெஸ்ரிமோனா
- ✶ இயாகோ
- ✶ பிரான்ஷியோ
- ✶ மைக்கல் கஷியோ
- ✶ எமிலியா

ஒதெல்லோ
- ✶ சிறந்த போர்வீரன்
- ✶ கறுப்பன், மூர் இனத்தவன்
- ✶ சந்தேக மனப்பாங்கு
- ✶ அனைவருடனும் உண்மையாகவும் விசுவாசமாகவும் பழகுபவன்
- ✶ எவரையம் நம்புபவன்
- ✶ வலிப்பு வியாதி உடையவன்
- ✶ கம்பீரமான உடலமைப்பு
- ✶ நாட்டுப்பற்றுடையவன்

டெஸ்ரிமோனா
- ✶ பிரபான்ஷியோவின் மகள்
- ✶ இரக்கமானவள்
- ✶ அப்பாவி
- ✶ அழகானவள்
- ✶ தெய்வ சிந்தையுடையவள்
- ✶ மன்னிக்கும் மனப்பாங்குடையவள்
- ✶ பிறர் துன்பத்தை நினைத்து வருந்துபவள்

இயாகோ

* ✶ வில்லத் தன்மை கொண்ட பாத்திரம்
* ✶ வெளிப்படையாக நல்லவனாகவும், உள்ளார்ந்த ரீதியில் தீய குணம் கொண்டவனாகவும் விளங்குபவன்
* ✶ நயவஞ்சகம் கொண்டவன்
* ✶ இரக்கமற்றவன், பதியாசை உடையவன்
* ✶ எவரையும் நம்பாதவன்

(யாதாயின் இரு பாத்திரங்களின் பெயர்களை எழுதியிருப்பின் - 01 புள்ளி
அவற்றுள் இரண்டு பற்றி விளக்கியிருப்பின் 03 புள்ளிகள்)

(iv) டெஸ்ரிமோனா மீது ஒதெல்லோ காட்டும் அளவற்ற அன்பு சந்தேகம் காரணமாக குரோதமாக மாறும் விதம்

* ✶ சந்தேகம் மனிதனை அழிவின்பால் இட்டுச் செல்லும்
* ✶ வேறுபட்ட பண்பாட்டுக்குரியோரது விருப்பு வெறுப்புகளுக்கு இடையில் வேறுபாடு நிலவும்
* ✶ கூட இருப்போரும் சதி செய்யும் நிலைமை
* ✶ காதல் காரணமான பழிவாங்குதல்கள்
* ✶ பதியாசை

(மேலும் பொருத்தமானவை - 4 பண்புகள் மட்டும் கூறியிருப்பின் - 04 புள்ளிகள்.
அவற்றை எழுத்துருவுடன் விளக்கியிருப்பின் 04 பள்ளிகள்) (8 புள்ளி)

02) (i) உள்ளதை உள்ளவாறு எடுத்துக் கூறுவதுடன் அகத்தே இருக்கின்ற உண்மையினையும் அதன் பின்புலத்தையும் எடுத்துக் கூறுவது தெரிவு தொகுப்பு, பகுப்பாய்வு போன்ற விடயங்களுக்கு முதன்மையளிப்பது. (3 புள்ளி)

(ii) கதை, பாத்திரங்கள், வேடஉடை, ஒப்பனை, மேடைப் பொருள், காட்சியமைப்பு, நடிப்புமுறை போன்ற விடயங்கள் ஒரு பாவையின் வீடு நாடகத்தில் யதார்த்தத்துடன் வெளிப்படும் முறைமையை எழுத்துருவுக்கூடாக விளக்கல் (6 புள்ளி)

(iii) காட்சிப் பொருட்கள், சொல்லாடல் என்பன குறியீடு மூலம் விளக்கப்படுவது

* ✶ ஆடு கதிரை
* ✶ கணப்படுப்பு
* ✶ நத்தார் மரம்
* ✶ எரிந்த மெழுகுதிரிக் கட்டைகள்
* ✶ நோவா பாவையாக சித்திரிக்கப்படல் - அணில்குஞ்சு....
* ✶ கதவு மூடிய ஒலி
* ✶ பியானோ
* ✶ கரிய சிலுவை வரைந்த கடிதம்

(வாழ்வோடு இணைத்து தொடர்புபடுத்தியிருப்பின் 06 புள்ளிகள்)

03) (i)

* ✶ துஷ்யந்தன்
* ✶ சகுந்தலை
* ✶ துருவாசர்
* ✶ கண்ணுவர்
* ✶ அனசூயை
* ✶ பிரியம்வதை
* ✶ விதூஷகன் (3 புள்ளி)

(ii) **துஷ்யந்தன்**

- ✶ மன்னன்
- ✶ வேட்டையாடுதல் வல்லவர்
- ✶ அழகானவன்
- ✶ பிள்ளைகளிடத்தில் விருப்பமுள்ளவன்
- ✶ மக்கள் நலன் பேணுவோன்
- ✶ இறைபக்தி உடையவன்
- ✶ காதலின் பால் நாட்டமுடையவன்
- ✶ மற்றவரை மதிப்பவன்

**சகுந்தலை**

- ✶ அழகானவள்
- ✶ இயற்கையை நேசிப்பவள்
- ✶ சூழலுக்கு ஏற்ப சமாளிப்பவள்
- ✶ பறவை, மிருகங்களிடம் அன்புடையவள்
- ✶ தன்னைச் சார்ந்தோரில் அன்புடையவள்

**கண்ணுவர்**

- ✶ மன்னனிடம் அன்புடையவர்
- ✶ பிறரை மதிப்பவர்

**அனசூயை, பிரியம்வதை**

- ✶ தலைவி மீது அளவில்லா அன்புடையோர்
- ✶ தலைவியின் நல்வாழ்வில் விருப்புக் கொண்டோர்
- ✶ தலைவியை தலைவனுடன் சேர்க்கப் பாடுபடுவோர்

(மூன்று பாத்திரங்களின் பண்புகள் பற்றி விளக்கியிருப்பின் 06 புள்ளிகள்)

(iii) ஆரம்ப அறிமுகம் - பூர்வாங்க

நாடக வளர்ச்சிக் கட்டங்கள் - ஐந்து

ஆரம்ப, பிரயத்தன, பிராபத்தியாய, நியதாப்தி, பலாகம்

(இவற்றை சாகுந்தல எழுத்துருவுடன் விளக்குதல்)

கதைப்பின்னல் - பிஜ, பிந்து, பதாக, பிரகரி, கார்ய

- ✶ நாயகன் / நாயகி பெயர் தலைப்பாக அமைதல்
- ✶ தன்னிகரில்லாத தலைவன்
- ✶ பிரதான சுவை - சிருங்காரம்
- ✶ புராண இதிகாச கதைகளை - கருவாகக் கொள்ளல்
- ✶ இன்பியல் முடிவு
- ✶ உயர் பாத்திரம் உயர் மொழியில் (சமஸ்கிருதம்) பேசுதல். சாதாரண பாத்திரம் சாதாரண மொழியில் (பிராக்ருதம்) பேசுதல்

(மேலும் பொருத்தமான பண்புகளை எழுத்துருவுடன் விளக்கியிருப்பின் 06 புள்ளிகள்)

## பிரிவு - B

04) (i) மட்டக்களப்பு - வடமோடி, தென்மோடி, வசந்தன், மகிடி, பறைமோளம் கூத்து
மலையகம் - காமன்கூத்து அருச்சுனன் தபசு, பொன்னர் சங்கர்
யாழ்ப்பாணம் - காத்தவராயன், வடமோடி, தென்மோடி
மன்னார் - வடபாங்கு, தென்பாங்கு, வாசாப்பு
முல்லைத்தீவு - கோவலன் கூத்து
திருகோணமலை - வேடன்பறி
(ஐந்து பிரதேசங்களும், ஒவ்வொரு பிரதேசத்துக்கும் ஒவ்வொரு கூத்துக்களும் எழுதியிருப்பின் - 05 புள்ளிகள்)

(ii) மேற்படி கூத்துக்களில் இரண்டு பற்றி
- ✶ அரங்கவெளி
- ✶ கதை
- ✶ நிகழ்த்துகை முறை
- ✶ அழகியல் அம்சங்கள்
- ✶ ஆற்றுவோர் - பார்ப்போர் தொடர்பு பற்றிக் கூறியிருப்பின் 05 புள்ளிகள்

(iii)
- ✶ ஆடலும் பாடலும் கொண்டது
- ✶ பெரும்பாலும் புராண இதிகாச கதையை கருவாகக் கொண்டது
- ✶ ஆற்றுவோர் - பார்ப்போர் ஊடாட்டம் அதிகளவில் கொண்டது
- ✶ அண்ணாவியார்
- ✶ படர்க்கை நிலைப் பண்பு
- ✶ பகட்டு, ஆடம்பரம்
- ✶ நம்பிக்கை

(மேலும் பொருத்தமான பண்புகள் இருப்பின் 05 புள்ளிகள்)

05)
(i) நடிகர் ஒன்றியம்
- ✶ 1970 இல் தேசிய மரபை தமிழ் மக்களுக்காக உருவாக்கும் முயற்சி
- ✶ நா. சுந்தரலிங்கம், தாசிசியஸ், சிவானந்தன், இளைய பத்மநாதன், மௌனகுரு போன்றவர்களால் உருவாக்கம் பெற்றது.
- ✶ அம்பலத்தாடிகள் குழு, கூத்தாடிகள் குழு மட்டக்களப்பு நாடக சபா இணைந்து தோற்றம் பெற்றமை
- ✶ மரபுவழி, பேடிமை மொழிபெயர்ப்பு என பலவகை நாடகத் தயாரிப்புக்கள்
- ✶ நாடக பயிற்சிகள் (05 புள்ளிகள்)

(ii) நாடக அரங்கக் கல்லூரி
- ✶ 1978 இல் குழந்தை ம. சண்முகலிங்கத்தால் ஸ்தாபிக்கப்பட்டது.
- ✶ சுய ஆக்க நாடகத் தயாரிப்பு
- ✶ நாடகப் பயிற்சி விருப்புகள், நாடகப் பட்டறைகள்
- ✶ சிறுவர் நாடகம், யதார்த்த நாடகம், நடன நாடகம், மொழிபெயர்ப்பு நாடகம் என பலவாக நாடகத் தயாரிப்புக்கள்
- ✶ இரசிகர் அவை (05 புள்ளிகள்)

(iii) அவைக்காற்றுக் கலைக்கழகம்
- ✶ 1978 இல் க. பாலேந்திரா, நிர்மலா நித்தியானந்தன், மு. நித்தியானந்தன் ஆகியோரால் உருவாக்கம்
- ✶ மொழிபெயர்ப்பு நாடகங்களில் கவனம் செலுத்தியமை
- ✶ யுகதர்மம், கண்ணாடி வார்ப்புக்கள்
- ✶ புலம்பெயர் நாடுகளில் அரங்கச் செயற்பாடு

(மேலும் பொருத்தமான விடயங்கள் விளக்கியிருப்பின் 05 புள்ளிகள்)

06)

(i) கோலம

- ✶ கரண அரங்கு
- ✶ வேடமுகப் பாவனை - கதுறு மரம்
- ✶ மகாசம்பத அரச கதையுடன் தொடர்பு
- ✶ பாடல், ஆடல் சொல்லாடல், நடிப்பு
- ✶ அரங்கவெளி - தானாயம்பல
- ✶ 50 இற்கு மேற்பட்ட பாத்திரங்கள்
- ✶ அம்பலாங்கொட கலை
- ✶ எடுத்துரைக்கும் பாத்திரம் - காரிய கரவணராள

(ii) நாடகம

- ✶ பாரம்பரிய ஆற்றுகை வடிவம், ஆண்கள் மட்டும் நடிப்பது
- ✶ பொத்தே குரு
- ✶ இரவு முழுவதும் ஆடப்படும்
- ✶ அரங்கு - கருளிய
- ✶ நாட்டார் பாவினங்கள்
- ✶ ஆடல், பாடல்
- ✶ இசைக்கருவி பயன்பாடு
- ✶ பிலிப்பு சிஞ்ஞோ
- ✶ எஹலப்பொல நாடகம, ஹரிஸ்சந்திரா

(iii) நூர்த்தி

- ✶ ஜொன். பஸ்ரியன்
- ✶ சோடனை பகட்டு, ஆடம்பரமான ஆடை அணிகலன்
- ✶ மூன்று பக்கம் அடைக்கப்பட்ட மேடை உ+ம்:- டவர் மண்டபம்
- ✶ ஹர்மோனியம்
- ✶ பாடல் வழியான அரங்கு
- ✶ தமிழில் இசை நாடகத்துக்கு ஒப்பானது
- ✶ சாள்ஸ் டயஸ், ஜோன்டி சில்வா, பீற்றர் டி சில்வா
- ✶ பழைய கதைகள் புதிய பாணியில் நடிக்கப்படும்

(iv) பாஸ்க்கா

- ✶ திருப்பாடுகளின் காட்சியாக நிகழ்த்தப்படுவது
- ✶ யேசுவின் பாடுகள் - மரிப்பும் உயிர்ப்பும் நிகழ்த்திக் காட்டப்படும்
- ✶ பெருங்காட்சிப் பண்பு
- ✶ நம்பிக்கை
- ✶ கத்தொலிக்கர்களுடன் தொடர்புடையது
- ✶ தேவாலய முறையில் நிகழ்த்தப்படும்
- ✶ மரப்பாவைகளைக் கொண்டு நிகழ்த்தப்படுவது உடக்குப் பாஸ்க்கா

(v) சன்னியகும

- ✶ 18 பேய்களுடன் தொடர்புடையது
- ✶ சிங்கள சடங்கு
- ✶ சன்னியகு எனும் பிசாசு ஓட்டும் கரணம்
- ✶ வேடப்புனைவு, பாடல், ஆடல், சொல்லாடல்
- ✶ நடிப்பு
- ✶ பின்னணி இசை மத்தளம், குழல்

($3 \times 5 = 15$ புள்ளி)



National e-learning Portal for The General Education